# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1721/5 - 2011 අගෝස්තු 29 වැනි සඳුදා - 2011.08.29

*1721/5 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ. 11/79.*

### 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2011, ஓகத்து 29.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (சரணடைந்தோரின் பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. இவ்வொழுங்குவிதிகளின் குறிக்கோளானது, இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் சரணடைகின்ற எவரேனுமாள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவ்வாளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தலும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக எந்நேரத்திலும் வலுவிலிருந்த ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நியதிகளின்படி சரணடைந்துள்ள ஆட்கள் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி எத்தகைய பராமரிப்பு மற்றும் பாதுகாவலை அவர்கள் முன்பதாக அனுபவித்துக் கொண்டிருந்தார்களோ அதே பராமரிப்பு மற்றும் பாதுகாவலைத் தொடர்ந்து அனுபவிப்பதனையும் உறுதிப்படுத்துவதற்கென இருத்தல் வேண்டும்.*

*3. (1) சனாதிபதி, கட்டளைமூலம், இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காகப் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கென, பெயரைக் கொண்டு அல்லது பதவியைக் கொண்டு ஆளொருவரை நியமிக்கலாம்.*

*(2) வெடிப்பொருட்கள் சட்டம், 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம், சுடுபடைக் கலங்கள் கட்டளைச் சட்டம் , 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என்பவற்றின் கீழான அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் VI, அத்தியாயம் VII அல்லது அத்தியாயம் VIII என்பவற்றின் கீழான 2011, ஓகத்து 30 ஆந் திகதிக்கு முன்னர் வலுவிலிருந்த ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு சம்பந்தமாக அல்லது பயங்கரவாதச்*

செயற்பாடுகளுக்குப் பயந்து, எவரேனும் பொலிசு அலுவலரிடம் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரிடம் அல்லது கட்டளைமூலம் சனாதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரிடம் அல்லது வேறெவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம் சரணடைந்தவரும், (இதனகத்துப்பின்னர் "சரணடைந்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவருமான) எவரேனுமாள், தாம் தன்னிச்சையாகவே சரணடைகின்றார் என்ற பயன்பட எழுத்திலான கூற்றொன்றை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் அல்லது ஆளிடம் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

4. பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், சரணடைந்தவர்களை ஏற்று வைத்திருக்கும் நோக்கத்திற்காக (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பாதுகாப்பு இடவசதி மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள்" என அறியப்படவேண்டிய நிலையங்களைக் காலத்துக்குக் காலம் அங்கீகரித்தல் வேண்டும்.

5. (1) மூன்றாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி ஆளொருவர் எந்த அலுவலரிடம் அல்லது ஆளிடம் சரணடைகின்றாரோ அந்த அலுவலர் அல்லது ஆள், சரணடைந்தவரை, அவ்வாறு சரணடைந்ததிலிருந்து பத்து (10) நாட்களுக்குள்ளாகப் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைத்தல், சரணடைந்தவரை நிலையம் ஒன்றுக்கு அவர் சாட்டுதல் செய்தல் வேண்டும். புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி சரணடைந்தவரை நிலையமொன்றிற்குச் சாட்டுதல் செய்ததன் மேல் அவர் நிலையத்தில் தங்கியிருக்கும் காலத்தின்போது சரணடைந்தவருக்குத் தோதான வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப அல்லது வேறு பயிற்சியளிக்க ஏற்பாடு செய்வதற்கு முயலுதல் வேண்டும்.

(2) மூன்றாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி ஆளொருவர் எந்த அலுவலரிடம் அல்லது வேறு ஆளிடம் சரணடைகின்றரோ அந்த அலுவலர் அல்லது எவரேனும் வேறு ஆள், சரணடைந்ததிலிருந்து பத்து (10) நாட்களுக்குப் பிந்தாமல், தன்னிச்சையான சரணடைதல் இடம்பெற்றுள்ளதாகவும் அத்தகைய ஆள் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் தரப்பட்ட முறையில் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளாரெனவும், பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

6. (1) சரணடைந்தவர் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என ஐந்தாம் ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி சரணடைந்தவர் எந்த அலுவலரிடம் அல்லது ஆளிடம் சரணடைந்தாரோ அந்த அலுவலரால் அல்லது ஆளினால் பாதுகாப்பு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதன்மேல் அவர் சரணடைந்தவர் எந்த நிலையத்திற்குச் சாட்டுதல் செய்யப்பட்டாரோ அந்த நிலையத்தில் முதலில் பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய சரணடைந்தவரை வைத்திருப்பதற்கு புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமாளித்து கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியானது அத்தகைய, சரணடைந்தவர், விடயத்திற்கேற்ப அலுவலரினால் அல்லது ஆளினால் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி சரணடைந்தவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டுமாத காலப்பகுதியொன்றுக்குள் சரணடைந்தவர் தொடர்பில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வின் தன்மையைச் சுட்டிக்காட்டி பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அறிக்கையொன்றை அனுப்புதல் வேண்டும்.

7. நிலையமொன்றுக்குச் சாட்டுதல் செய்யப்பட்டவரான சரணடைந்தவர் ஒருவர், நிலையத்துக்குப் பொறுப்பான அலுவலரின் அனுமதியுடன், இரு வாரங்களுக்கு ஒரு தடவை விடயத்துக்கேற்றாற்போல, அவரது பெற்றோரை அல்லது உறவினரை அல்லது பாதுகாவலரைச் சந்திக்க உரித்துடையவராக இருக்கலாம்.

8. (1) புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி மேலே கூறப்பட்ட பன்னிரண்டு மாத காலப்பகுதி முடிவடைதல் முன்னர், அவரின் அபிப்பிராயப்படி சரணடைந்தவரை விடுதலைசெய்தல் தோதானதா அல்லது அத்தகைய சரணடைந்தவரின் புனர்வாழ்வை மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்க வேண்டுமா என்பதனைக் குறிப்பிட்டு பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அறிக்கையொன்றை அனுப்புதல் வேண்டும்.

(2) பன்னிரண்டு மாத காலப்பகுதியின் முடிவில், பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அவருக்குப் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பார்வையிட்ட பின்னர் –

(அ) அத்தகைய ஆளை விடுதலை செய்யுமாறு கட்டளையிடலாம் ; அல்லது

(ஆ) ஒரு தடவையில் மூன்று மாத காலப்பகுதிகளுக்குப் புனர்வாழ்வுக் காலப்பகுதியை நீடிக்கலாம். ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நீடிப்புக்களின் கூட்டுமொத்தக் காலப்பகுதி மேலும் பன்னிரண்டு மாதங்களை விஞ்சுதல்ஆகாது. அத்தகைய நீடிப்பு ஒவ்வொன்றும் புனர்வாழ்வு ஆணையாளர் விதப்புரையின்கீழ் செய்யப்படுதல் வேண்டும்.

(3) நீடிக்கப்பட்ட புனர்வாழ்வுக் காலப்பகுதியின் முடிவில், சரணடைந்தவர் விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

9. (1) ஆளொருவர் மூன்றாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி எந்தப் பிரிவிற்குள் சரணடைந்தாரோ, அந்தப் பிரிவிற்குப் பொறுப்பான பொலிசுக் கண்காணிப்பாளர், அவர் ஒரு நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர், பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடன், இவ்வொழுங்குவிதிகளின் 3 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில் தரப்பட்ட தவறொன்றைப் புரிவதில் தொடர்புபட்டிருப்பதாக அல்லது சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் எவரேனும் சரணடைந்தவரின் ஈடுபாடு பற்றிப் புலனாய்வு செய்யலாம்.

(2) ஏதேனும் விளக்கத்தின் முடிவில் சரணடைந்தவர் எத்தவறு தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அல்லது குற்றப்பகர்வு செய்யப்பட்டுள்ளாரோ அத்தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படுகின்றவிடத்து, நீதிமன்றம், அவர் மீது விதிக்கப்பட வேண்டிய தண்டனைத்தீர்ப்பைத் தீர்மானிக்கையில், அவர் சரணடைந்தமை பற்றிய நிகழ்வையும் கருத்துக்கெடுத்துக்கொள்ளுதல் வேண்டும். நீதிமன்றமானது தோதானவிடத்து, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மேலுமொரு காலப்பகுதிக்கு ஒரு நிலையத்தில் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(3) தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டு (2) ஆம் பந்தியின் நியதிகளின்படி நீதிமன்றக் கட்டளை மூலம் மேற்கொண்டு ஒரு காலப்பகுதிக்கு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவரான சரணடைந்துள்ள ஒருவர், அவரது புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அல்லது நிலையத்திலுள்ள ஏனைய சரணடைந்தவர்களின் நலனுக்குப் பாதகமான ஒரு முறையில் செயலாற்றுமிடத்து, புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி, அவருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தின் முன்னிலையில் அவரைக் கொணர்வதன் மீது அத்தகைய நிகழ்வுகளை நீதிமன்றத்திற்கு முன்வைக்கலாம் ; அத்துடன் நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய சுருக்கமுறை விசாரணையின் பின்னர், நீதிமன்றம் அத்தகைய மேலதிகப் புனர்வாழ்வுக் காலப்பகுதிக்குப் பதிலாக அவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளித்து கட்டளையாக்கலாம்.

10. (1) புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் மாவட்டத்தின் மாவட்டச் செயலாளருடனும், இயைபான மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருடனும், மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தவிசாளருடனுமான கலந்தாலோசனையுடன் -

(அ) (இதனகத்துப்பின்னர் "சரணடையும் சிறுவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (3) ஆம் பந்தியின் நியதிகளின்படி சரணடைகின்றவரான அல்லது கைது செய்யப்படுகின்றவரான பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட எவரேனும் ஆளுக்குத் தங்குமிடவசதி அளிக்கும் நோக்கத்திற்காக பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையங்களையும்; அத்துடன்

(ஆ) சரணடையும் சிறுவரை அவரது குடும்பத்தினுள்ளும் சமுதாயத்தினுள்ளும் அத்துடன் சமூகத்தினுள்ளும் ஒருங்கிணைக்கும் முறைவழிக்கு வசதியளிப்பதற்காக, பராமரிப்பும், உளவியல் சமூக ஆதரவும் வாழ்க்கைத் தொழிற்சார் மற்றும் வேறு பயிற்சியும் வழங்கும் நோக்கத்திற்காகப் பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையங்களையும்,

தாபிப்பதற்குப் பொருத்தமான அமைவிடங்களை இனம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(2) ஒராம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய அமைவிடங்கள் இனங்காணப்படுகின்றவாறும் இனங்காணப்படுகின்றபோதும், ஆணையாளர் தலைமையதிபதி தாபிக்கப்படுகின்ற நிலையத்தின் வகையையும் அத்தகைய நிலையம் தாபிக்கப்பட்டுள்ள அமைவிடத்தையும் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலின்மூலம் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) (அ) கடன் பிணிப்பிற்கு வலுக்கட்டாய அல்லது கட்டாயத் தொழிலுக்கு அல்லது அடிமைத் தனத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள அல்லது ஆயுத மோதலொன்றில் ஒரு போராளியாக வலுக்கட்டாயமாக ஆட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் 360 இ என்னும் பிரிவின் கீழான தவறொன்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ; அல்லது

(ஆ) அவர் கடன் பிணிப்பிற்கு வலுக்கட்டாய அல்லது கட்டாயத் தொழிலுக்கு அல்லது அடிமைத் தனத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள அல்லது ஆயுத மோதலொன்றில் போராளியொருவராக வலுக்கட்டாயமாக ஆட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் 360 இ என்னும் பிரிவின் கீழ் தவறொன்றுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் காலப்பகுதியின்பொழுது , தவறொன்றைப் புரிந்துள்ள அல்லது புரிந்துள்ளவராகச் சந்தேகிக்கப்படுகின்ற ; அல்லது

(இ) சொல்லப்பட்ட ஆயுத மோதலுக்கான எவரேனும் திறத்தவராலான அச்சுறுத்தலின் அல்லது பழிவாங்கலின் அச்சம் காரணமாக அல்லது கடன் பிணிப்பிற்கு வலுக்கட்டாய அல்லது கட்டாயத் தொழிலுக்கு அல்லது அடிமைத் தனத்திற்கு உட்படுத்தப்படுகின்ற அல்லது ஆயுத மோதலொன்றில் போராளியொருவராக வலுக்கட்டாயமாக ஆட்சேர்க்கப்படுகின்ற

அல்லது தண்டனைச் சட்டக்கோவையின் 360 இ என்னும் பிரிவின் கீழ் தவறொன்றுக்கு உட்படுத்தப்படுகின்ற அச்சம் காரணமாக

பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர் எவரேனும் பொலிசு அலுவலரிடம் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரிடம் சரணடையுமிடத்து அல்லது அவரால் கைது செய்யப்படுமிடத்து அல்லது அதற்கெனச் சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரிடம் அல்லது வேறு எவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம் சரணடையுமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் அல்லது சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட பகிரங்க அலுவலர் அல்லது வேறு ஆள் அல்லது ஆட்கள் குழு சரணடையும் அத்தகைய சிறுவரின் வாக்குமூலத்தையும் சரணடையும் அத்தகைய சிறுவர் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட சூழ்நிலைகளையும் பதிதல் வேண்டும்.

11. அத்தகைய வாக்குமூலத்தைப் பதிந்ததன் மேல் உடனடியாக, சரணடைந்த அத்தகைய சிறுவர் எந்தப் பொலிசு நிலையத்தில் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் கூறில் சரணடைகின்றாரோ அல்லது எந்தப் பொலிசு நிலையத்தால் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் கூறினால் கைதுசெய்யப்படுகின்றாரோ அந்தப் பொலிசு நிலையத்தின் அல்லது கூறின்பொறுப்பலுவலர், அல்லது அச்சிறுவர் சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பகிரங்க அலுவலரிடம் அல்லது வேறு எவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம் சரணடைந்திருப்பாராயின் அத்தகைய பகிரங்க அலுவலர் அல்லது அத்தகைய வேறு ஆள் அல்லது ஆட்கள் குழு எந்தத் திணைக்களத்தை, அலுவலகத்தை, நிறுவனத்தை அல்லது ஒழுங்கமைப்பைச் சேர்ந்துள்ளாரோ அல்லது சேர்ந்துள்ளதோ அந்தத் திணைக்களத்தின், அலுவலகத்தின், நிறுவனத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் சிரேட்ட அலுவலர் ஒருவர், சரணடையும் அத்தகைய சிறுவரின் கட்டுக்காவலை -

(அ) சரணடைந்த வயது வந்தோர் அல்லது தடுத்து வைக்கப்பட்டோர் எவருமிருப்பின் அவர்களின் இடத்திலிருந்து புறம்பான ஓரிடத்தில் இருப்பதனை ; அத்துடன்

(ஆ) சரணடையும் சிறுவர் ஒரு பெண் பிள்ளையாக இருக்குமிடத்து -

(i) சரணடையும் ஆண் சிறுவர்கள் அல்லது வயதுவந்த ஆண்கள் எவருமிருப்பின் அவர்களின் இடத்திலிருந்து புறம்பான ஓரிடத்தில் இருப்பதனை;

(ii) அச்சிறுமி எந்தப் பொலிசு நிலையத்தில் அல்லது ஆயதந்தாங்கிய படைகளின் கூறில் சரணடைந்துள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்தின் அல்லது கூறின் பொறுப்பலுவலரால் அந்நோக்கத்திற்கெனக் குறித்தளிக்கப்பட்ட முறையே பெண் பொலிசு அலுவலர் ஒருவரின் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் பெண் உறுப்பினர் ஒருவரின் பொறுப்பிலும் பராமரிப்பிலும் கட்டுக்காவலிலும் அல்லது சரணடையும் சிறுமி சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பகிரங்க அலுவலரிடம் அல்லது வேறு எவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம் சரணடைந்துள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய பகிரங்க அலுவலர் அல்லது வேறு ஆள் அல்லது ஆட்கள் குழு எந்தத் திணைக்களத்தை, அலுவலகத்தை, நிறுவனத்தை அல்லது ஒழுங்கமைப்பைச் சேர்ந்துள்ளாரோ அல்லது சேர்ந்துள்ளதோ அந்தத் திணைக்களத்தின், அலுவலகத்தின், நிறுவனத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் சிரேட்ட அலுவலர் ஒருவரால் அந்நோக்கத்திற்கெனக் குறிப்பாகக் குறித்தளிக்கப்பட்ட பெண் அலுவலர் ஒருவரின் பொறுப்பில், பராமரிப்பில் அல்லது கட்டுக்காவலில் இருப்பதனை,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

12. (1) சரணடையும் சிறுவர் ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரிடம் அல்லது சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரிடம் அல்லது எவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம் சரணடைந்தால் அல்லது கைது செய்யப்பட்டால், ஆயுதந்தாங்கிய படைகளின் அத்தகைய உறுப்பினர் அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர் அல்லது அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் குழு, உடனடியாக இணைப்பிரதிகளில், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் இல. 1 இல் பதிவொன்றைச் செய்வித்தல் வேண்டுமெனப்படுவதுடன், அத்தகைய சரணடைவின் பின்னர் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் சரணடைந்த அத்தகைய சிறுவரை மிக அருகிலுள்ள பொலிசு நிலையத்தில் முன்னிலைப்படுத்தச் செய்தலும் வேண்டும். படிவம் இல. 1 இல் தயாரிக்கப்பட்ட பதிவேட்டின் மூலப்பிரதி பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவேட்டின் இணைப்பிரதி, பதிவேட்டைத் தயாரிக்கின்ற ஆளினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலர் அத்தகைய சரணடைந்த சிறுவரின் வாக்குமூலத்தைப் பதிதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவேட்டின் இணைப்பிரதி, பதிவேட்டைத் தயாரிக்கின்ற ஆளினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலர் அத்தகைய சரணடைந்த சிறுவரின் வாக்குமூலத்தைப் பதிதல் வேண்டுமென்பதுடன், சரணடைந்த அத்தகைய சிறுவரின் வாக்குமூலத்தின் பதிவேடும் சரணடைந்த அத்தகைய சிறுவர் சரணடைந்த சூழ்நிலைகள் பற்றிய பதிவேடும் அத்தகைய முன்னிலைப்படுத்தும் நேரத்தில் பொலிசுக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(2) பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலர் சரணடைந்த அத்தகைய சிறுவர் தொடர்பில் பொருளளவில் இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் இல. 2 இல் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

13. (1) சரணடைந்த சிறுவர் பொலிசிடம் சரணடைந்துள்ளவிடத்து அல்லது பொலிசினால் கைது செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரால் அல்லது சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரால் அல்லது எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் பொலிசு நிலையத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அத்தகைய பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலர் அத்தகைய சரணடைதலின் நிகழ்வு பற்றி உடனடியாக, சரணடைந்த அத்தகைய சிறுவரின் பெற்றோருக்கும் அல்லது பாதுகாவலருக்கும் நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலருக்கும் அத்தகைய இடப்பரப்பின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒருங்கிணைப்பாளருக்கும் அறிவிப்பதற்கான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சரணடைவிலிருந்து இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் சரணடைந்த அத்தகைய சிறுவரை இயைபான நீதிவான் முன்னர் முன்னிலைப்படுத்துதலும் வேண்டும்.

(2) சரணடைந்த அத்தகைய சிறுவர் எந்த நீதிவான் முன்னர் முன்னிலைப்படுத்தப்படுகின்றாரோ அந்த நீதிவான் -

(அ) சரணடைந்த அத்தகைய சிறுவரை, நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலருடனான கலந்தாலோசனையுடன், அவசியமானவிடத்து பொலிசின் அல்லது சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலரின் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒருங்கிணைப்பாளரின் அத்துடன் சாத்தியப்படுமிடத்து சரணடைந்த சிறுவரின் பெற்றோரின் உதவி பெற்று ஒன்றில் நீதிமன்றத்தில் அன்றேல் நீதிவானின் வதிவிடத்தில் தனிமையில் நேர்காணல் வேண்டும் :

ஆயின், அத்தகைய நேர்காணலுக்குச் சரணடைந்த சிறுவரின் தாய் மொழி பயன்படுத்தப்படுவதை அல்லது அவ்வாறு செய்வது சாத்தியப்படாதவிடத்து அத்தகைய நேர்காணலின் சமகால மொழிபெயர்ப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்து வதற்கான நீதிவான் அவசியமான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) சரணடைந்த அத்தகைய சிறுவரின் மருத்துவப் பரிசோதனையொன்றுக்குக் கட்டளையிடுதல் வேண்டும் ;

(இ) அவ்விடப்பரப்பிற்கான சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலருடனும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒருங்கிணைப்பாளருடனான கலந்தாலோசனையுடன், சரணடைந்த அத்தகைய சிறுவர் அவர் முன் முன்னிலைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சரணடைந்த சிறுவரின் உடனடியான மற்றும் நீண்டகாலத் தேவைகள் தெளிவாகத் தரப்படும் சமூக விசாரணை அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு அத்தகைய நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலருக்குக் கட்டளையிடுதல் வேண்டும் ;

(ஈ) சரணடைந்த சிறுவரை அல்லது பெற்றோரின் அல்லது பாதுகாவலர்களின் பொறுப்பிற்கும், பராமரிப்பிற்கும் கட்டுக்காவலுக்கும் திருப்பியனுப்புதல் வேண்டும் அல்லது சரணடைந்த சிறுவர், மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரினால் ஆதரிக்கப்படுவதும் கண்காணிக்கப்படுவதுமான பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் ஒரு மாதகாலப்பகுதிக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனக் கட்டளையிடுதலும், சரணடைந்த அத்தகைய சிறுவருக்குத் தங்குமிட வசதியளிக்கப்படும் முகவரியை உடனடியாகப் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், சரணடைந்த சிறுவர் போராளியாக ஆயுத மோதலொன்றில் ஈடுபட்டுள்ளார் எனச் சான்று உள்ளவிடத்து நீதிவான், ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றிற்கு அவரை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

14. (1) சரணடைந்த சிறுவர் பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிவான் (13) ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு மாத காலப்பகுதியின் முடிவில் அத்தகைய பரிசோதனையினதும் நேர்க்காணலினதும் பெறுபேறுகளையும் 13 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சமூக விசாரணை அறிக்கையையும் கருத்திற்கொண்டும் பொலிசின் உதவியுடனும் -

(அ) சரணடைந்த அத்தகைய சிறுவர் அவரது பெற்றோரின் அல்லது பாதுகாவலர்களின் பொறுப்பிற்கும் பராமரிப்பிற்கும் கட்டுக் காவலுக்கும் திருப்பியனுப்பப்பட வேண்டுமா ;

(ஆ) சரணடைந்த அத்தகைய சிறுவர் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாவற் சேவைகள் ஆணையாளரின் மேற்பார்வையின்கீழ் பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு தங்க வைக்கப்பட வேண்டுமா ; அல்லது

(இ) சரணடைந்த அத்தகைய சிறுவர் ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு "பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றில்" தங்க வைக்கப்பட வேண்டுமா,

எனத் தீர்மானித்தல் வேண்டும் :

ஆயின், சரணடைந்த சிறுவர் அவர் போராளி ஒருவராக ஆட் திரட்டப்பட்ட ஏதேனும் காலப்பகுதியின்போது தவறொன்றைப் புரிந்துள்ளார் என்பதற்கு சான்று இருக்குமிடத்து, நீதிவான் ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அவரை பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றில் வைத்தல் வேண்டும் :

ஆயின், மேலும் நீதிவான் சரணடைந்த அத்தகைய சிறுவர் தொடர்பில் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அவரது மீளாய்வுத் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அத்தகைய சிறுவர் தொடர்பில் காலாண்டு அறிக்கைகளைத் தமக்கு அனுப்புமாறு அத்தகைய சிறுவர் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) (அ) ஏழாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானத்தை எடுக்கையில் நீதிவான் -

(i) சரணடைந்த சிறவரின் பாதுகாப்பையும் சிறந்த நலன்களையும் உறுதிப்படுத்துவதற்கான அவசியத்தையும் ; அத்துடன்

(ii) சரணடைந்த சிறுவரினதும் அவரது குடும்பத்தினதும் பாதுகாப்பை எல்லா நேரங்களிலும் உறுதிப்படுத்துவதற்கான அவசியத்தை கருத்திற்கொண்டு கூட்டுக் குடும்பத்திற்குள் குடும்பமாக ஒன்றுசேர்தலை அல்லது தங்கியிருத்தலைப் பயனுறுத்த வேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) நீதிவான் தமது தீர்மானத்தை எடுத்ததன் மீது உடனடியாக தமது தீர்மானத்தின் பிரதியொன்றை விடயத்திற்கேற்ப பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் அல்லது பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தில் சரணடைந்த சிறுவர் தங்கவைக்கப்படவுள்ள காலப்பகுதி பற்றி அவரது விதப்புரை மற்றும் அத்தகைய சரணடைந்த சிறுவர் தங்க வைக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அல்லது விதிக்கின்ற இடத்தின் முகவரி என்பவற்றுடன் சேர்த்து புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிக்கச் செய்வித்தல் வேண்டும்.

15. சிறுவர் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் எந்த நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படுகின்றாரோ அந்த நீதிவான் அல்லது (13) ஆம் ஒழுங்குவிதியின் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் தீர்மானமொன்றை எடுக்கின்ற நீதிவான் -

(அ) (13) ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனையில் அல்லது நேர்க்காணலில் ; அத்துடன்

(ஆ) சரணடையும் சிறுவர் அனுப்பப்படும் பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட வசதி நிலையத்தில் அல்லது பாதுகாப்பளிக்கும் புனர்வாழ்வு நிலையத்தில்,

சிறுவர்க்கு இதமான நடவடிக்கை முறை கையாளப்பட வேண்டும் எனப் பணித்தல் வேண்டும் என்பதுடன் சரணடையும் சிறுவர் கனிவுடனும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

16. (1) சரணடைந்த அத்தகைய சிறுவர் அவரது பெற்றோரிடம் அல்லது பாதுகாவலரிடம் திருப்பியனுப்பப்பட வேண்டுமென நீதிவான் கட்டளையிட்டால் நன்னடத்தைப் பாதுகாவலர் அலுவலர் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு அலுவலரினதும் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரினதும் ஆதரவுடன் சரணடைந்த அத்தகைய சிறுவர் அவரது குடும்பத்தினுள்ளும் சமுதாயத்தினுள்ளும் மீள ஒருங்கிணைக்கப்படும் முறை வழியை அதன்பின்னர் அவரது பெற்றோரிடம் அல்லது பாதுகாவலரிடம் திருப்பிச் சென்ற தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அவரது தேர்ச்சியுடன் சேர்த்து கண்காணித்தல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும். விடயத்திற்கேற்ப அத்தகைய நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர், சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு அலுவலர் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளர் சரணடையும் அத்தகைய சிறுவரை மாதாந்தம் சென்று பார்வையிடுதல் வேண்டும் என்பதுடன் அவரது தேர்ச்சியைப் பற்றிய மாதாந்த அறிக்கைகளை நீதிமன்றத்திற்கும் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் மாவட்டத்திலுள்ள மீள் ஒருங்கிணைப்பு சேவைகளிலிருந்து நன்மை அடைவார் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

அத்தகைய மீள் ஒருங்கிணைப்பு சேவைகள் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் தவிசாளரால் (மா. சி. அ. கு.) மாவட்டத்திலுள்ள ஏனைய சிறுவர் பாதுகாப்பு முகவராண்மைகளுடனான கூட்டுச் செயற்பாட்டுடன் ஒத்திசைவு செய்யப்படுதல் வேண்டும். மாகாண நன்னடத்தைப் பாதுகாவல். சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் சரணடைந்த அத்தகைய சிறுவர் தொடர்பில் பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான படிவம் (II) இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவொன்றைப் பேணுதலும் வேண்டும்.

(3) மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் அத்தகைய சிறுவரின் தேர்ச்சி பற்றிய காலாண்டு அறிக்கைகளை புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

17. சரணடைந்த சிறுவர் ஒருவர் பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையமொன்றில் தங்க வைக்கப்பட வேண்டுமென நீதிவான் கட்டளையிடுவாராயின் அத்தகைய பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையம் அத்தகைய நீதிவான் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிப் பிரிவு அல்லாத வேறொரு நீதிப் பிரிவில் அமைந்திருக்குமாயின் அத்தகைய நீதிவான் சரணடைந்த அத்தகைய சிறுவர் தொடர்பிலான பதிவேட்டை அத்தகைய பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையம் அமைந்துள்ள இடப்பரப்பின் மீது நியாயாதிக்கம் கொண்ட நீதிவானுக்கு மாற்றுதல் வேண்டும்.

18. (1) சரணடைந்த அத்தகைய சிறுவர் தங்கவைக்கப்பட்டுள்ள பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தின் பொறுப்பலுவலர் -

(அ) சரணடைந்த அத்தகைய சிறுவரை மருத்துவ அலுவலர் ஒருவரால் பரிசோதிக்கச் செய்வித்தலும் அவருக்கு அவசியமான சுகாதாரப் பராமரிப்பை அளிப்பதற்கு அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ளுதலும் வேண்டும் ;

(ஆ) ஏழாம் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட சமூக விசாரணை அறிக்கையில் இனங்காணப்பட்ட சரணடைந்த அத்தகைய சிறுவரின் தேவைகளுக்கிணங்க அவருக்கு உளவியல் ஆலோசனை வழங்குதல் வேண்டும் ;

(இ) குறைந்த பட்சம் ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒருமுறை குடும்பத்தவர்களால் பார்வையிடப்படுவதற்கும் தொடர்பு கொள்ளப்படுவதற்கும் வசதியளித்தலும் ஊக்குவித்தலும் வேண்டும் ;

(ஈ) சிறுவருக்கு அவசியமான உடலியல் பராமரிப்பும் வாழ்வாதாரமும் வழங்குதல் வேண்டும் ;

(உ) சரணடைந்த சிறுவர் அவசியமான எத்தகைய ஆளடையாளத்தையும் வேறு ஆவணங்களையும் பெறுவதற்கு சட்டரீதியிலான உரித்துடையவராக இருக்கின்றாரோ அத்தகையனவும் அவரது உடைமையில் தற்போது இல்லாதிருப்பவையுமான ஆளடையாளத்தையும் வேறு ஆவணங்களையும் பெறுவதற்கு அச்சிறுவருக்கு உதவுதல் வேண்டும்;

(ஊ) சிறுவர் தெரிந்தெடுக்கும் வாழ்க்கைத் தொழில் ஒன்றை மேற்கொள்வதற்கான துணை வசதியளிப்பதற்கு அவருக்குக் கல்வி அல்லது தோதான தொழிற்பயிற்சி, தொழில் நுட்பப்பயிற்சி மற்றும் வேறு பயற்சியளித்தல் ;

(எ) மாதாந்த அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை நீதிவானுக்கும் நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலருக்கும் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கைகளில் சரணடைந்த சிறுவரின் நடப்பு அந்தஸ்து, அவருக்கு அளிக்கப்படும் பயிற்சி மற்றும் வசதிகள் அத்துடன் சரணடைந்த அத்தகைய சிறுவரின் தேர்ச்சி என்பவற்றிலான எவையேனும் மாற்றங்கள் பற்றிய தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஏ) மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் சரணடைந்த ஒவ்வொரு சிறுவர் தொடர்பிலும் பொருளளவில் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் இல. 3 இல் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தின் பொறுப்பலுவலர் பொருளளவில் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் இல. 4 இல் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

19. எந்த நீதிவானுக்கு (18) ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றனவோ அந்த நீதிவான் சரணடைந்த அத்தகைய சிறுவரின் தேர்ச்சியைக் கண்காணிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா

வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் சரணடைந்த அத்தகைய சிறுவரை பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைப்பது அல்லது அவரது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கட்டுக்காவலுக்கும் பராமரிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் திருப்பியனுப்புவது மேலும் தோதானதாகும் என அவர் அபிப்பிராயப்படுமிடத்து சரணடைந்த அத்தகைய சிறுவரை அத்தகைய பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்திற்கு இடம் மாற்றுதல் அல்லது அவரது பெற்றோரின் கட்டுக்காவலுக்கு பராமரிப்பிற்கும் அத்துடன் கட்டுப்பாட்டிற்கும் திருப்பியனுப்புதல் வேண்டும்.

20. சரணடைந்த அத்தகைய சிறுவரை பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட வேண்டும் என அல்லது சரணடைந்த அத்தகைய சிறுவர் அவரது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கட்டுக்காவலுக்கும் பராமரிப்பிற்கும் அத்துடன் கட்டுப்பாட்டிற்கும் திருப்பியனுப்பப்பட வேண்டும் என நீதிவான் கட்டளையிடுமிடத்து அவர் -

(அ) சரணடைந்த அத்தகைய சிறுவர் எந்த இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுகின்றானோ அல்லது அனுப்பப்படுகின்றானோ அந்த இடத்தின் முகவரியை புனர்வாழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கச் செய்வித்தலும் ; அத்துடன்

(ஆ) அவரது கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விடயத்திற்கேற்ப பெற்றோருக்கும் அல்லது பாதுகாவலருக்கும் அத்துடன் பொலிசுக்கும் வழங்கச் செய்வித்தலும்

வேண்டும்.

21. சரணடைந்த சிறுவர் பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றில் வைக்கப்பட வேண்டுமென நீதிவான் கட்டளையிடுவாராயின் அத்துடன் அத்தகைய பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையம் அத்தகைய நீதிவான் எந்த நீதிப்பிரிவின் மேல் நியாயாதிக்கம் கொண்டுள்ளாரோ அந்த நீதிப்பிரிவு அல்லாத வேறொரு நீதிப் பிரிவாக இருக்குமாயின்,

(அ) அத்தகைய நீதிவான் சரணடைந்த அத்தகைய சிறுவர் தொடர்பிலான பதிவேட்டை அத்தகைய பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையம் அமைந்துள்ள இடப்பரப்பின் மேல் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு மாற்றுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சரணடைந்த அத்தகைய சிறுவரின் தேர்ச்சியின் கண்காணிப்பு எந்த நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர் சரணடைந்த அத்தகைய சிறுவர் தொடர்பிலான எல்லா இயைபான பதிவேடுகளையும் அறிக்கைகளையும் அத்தகைய பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையம் அமைந்திருக்கும் இடரப்பரப்பின் மேல் நியாயாதிக்கம் கொண்டுள்ள இயைபான நன்னடத்தைப் பாதுகாப்பு அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்.

22. (1) சரணடைந்த அத்தகைய சிறுவர் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பலுவலர் -

(அ) சரணரடைந்த அத்தகைய சிறுவரை மருத்துவ அலுவலர் ஒருவரால் பரிசோதிக்கச் செய்வித்தலும் அவருக்கு அவசியமான சுகாதாரப் பராமரிப்பை அளிப்பதற்கு அவசியமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும் ;

(ஆ) ஏழாம் பந்தியின் கீழ் தயாரிக்கப்பட்ட சமூக விசாரணை அறிக்கையில் இனங்காணப்பட்ட சரணடைந்த அத்தகைய சிறுவரின் தேவைகளுக்கிணங்க உளவியல் சமூக ரீதியிலான ஆலோசனை வழங்குதல் வேண்டும் ;

(இ) குறைந்தபட்சம் மாதமொருமுறையாவது அவரது குடும்பத்தவர்களால் பார்வையிடுவதற்கும் தொடர்பு கொள்ளப்படுவதற்கும் வசதியளித்தலும் ஊக்குவித்தலும் வேண்டும் ;

(ஈ) சரணடையும் சிறுவருக்கு அவசியமான வாழ்வாதாரமும் உடலியல் பராமரிப்பும் வழங்குதல் வேண்டும் ;

(உ) சரணடைந்த சிறுவர் அவசியமான எத்தகைய ஆளடையாளத்தையும் வேறு ஆவணங்களையும் பெறுவதற்கு சட்டரீதியிலான உரித்துடையவராக இருக்கின்றாரோ அத்தகையனவும் அவரது உடைமையில் தற்போது இல்லாதிருப்பவையுமான ஆளடையாளத்தையும் வேறு ஆவணங்களையும் பெறுவதற்கு அச்சிறுவருக்கு உதவுதலும் வேண்டும்;

(ஊ) சிறுவர் தெரிந்தெடுக்கும் வாழ்க்கைத் தொழில் ஒன்றை மேற்கொள்வதற்கான துணை வசதிகளையளிப்பதற்கு அவருக்குக் கல்வி, அல்லது தோதான தொழிற்பயிற்சி, தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வேறு பயிற்சியளித்தல் ;

(எ) காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை நீதிவானுக்கும் நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலருக்கும் புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கைகளில் சரணடைந்த சிறுவரின் நடப்பு அந்தஸ்து, அவருக்கு அளிக்கப்படும் பயிற்சி மற்றும் வசதிகள் அத்துடன் சரணடைந்த அத்தகைய சிறுவரின் தேர்ச்சி என்பவற்றிலான எவையேனும் மாற்றங்கள் பற்றிய தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் சரணடைந்த ஒவ்வொரு சிறுவர் தொடர்பிலும் பொருளளவில் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் இல. 3 இல் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பலுவலர் பொருளளவில் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் 4 இல் பதிவேடொன்றைப் பேணுதலும் வேண்டும்.

23. (1) பதினெட்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகள் எந்த நீதிவானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவோ அந்த நீதிவான் :-

(அ) சரணடைந்த எவரேனும் அத்தகைய சிறுவரை சரணடைந்த சிறுவரின் தேர்ச்சி தகுந்தவாறு கண்காணிக்கப்படுவதையும் அவரது பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக விடயத்திற்கேற்ப பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் அல்லது பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தில் பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தின் விடயத்தில் மாதம் ஒரு முறையும் பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தின் விடயத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் தங்கவைப்பதற்கான அல்லது வைத்திருப்பதற்கான அவரது முடிவை மீளாய்வு செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சரணடைந்த அத்தகைய சிறுவரை வெறொரு மாகாணத்திலுள்ள வேறொரு நிலையத்தில் தங்கவைப்பது அல்லது அவரது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கட்டுக் காவலுக்கும் பராமரிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் திருப்பியனுப்புவது மேலும் தோதானதென அவர் அபிப்பிராயப்படுமிடத்து சரணடைந்த அத்தகைய சிறுவரை அத்தகைய வேறு நிலையத்திற்கு இடமாற்றம் செய்தல் அல்லது அவரது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் கட்டுக்காவலுக்கும், பராமரிப்பிற்கும் அத்துடன் கட்டுப்பாட்டிற்கும் கையளித்தல் வேண்டும்.

(2) பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பலுவலர் பொருளளவில் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் 4 இல் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

24. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"கடன் பிணிப்பு", "வலுக்கட்டாயத் தொழில்" அத்துடன் "அடிமைத் தனம்" என்பது (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையில் அவற்றிக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர்" மற்றும் "சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு அலுவலர்" என்பது முறையே சரணடைந்த சிறுவர் எந்த இடப்பரப்பில் சரணடைந்தாரோ அல்லது எந்த இடப்பரப்பிலுள்ள பாதுாகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையமொன்றில் அல்லது பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றில் சரணடைந்த சிறுவர் தங்கவைக்கப்பட்டுள்ளாரோ அல்லது வைக்கப்பட்டுள்ளாரோ அந்த இடப்பரப்பின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நன்னடத்தை அலுவலர் எனவும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு அலுவலர் எனவும் அத்துடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கான ஒருங்கிணைப்பாளர் எனவும் பொருள்படும் ;

"பொலிஸ் நிலைய பொறுப்பலுவலர்" என்பது சரணடைதல் நடைபெற்ற இடப்பரப்பின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பலுவலர் என்று பொருள்படும் ;

"நீதிவான்" என்பது இந்த ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சரணடைந்த சிறுவர் எந்த இடப்பரப்பில் சரணடைந்தாரோ அந்த இடப்பரப்பிலுள்ள பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் சரணடைந்த சிறுவர் தங்கவைக்கப்பட்டுள்ளாரோ அல்லது பாதுகாப்பளிக்கும் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றில் வைக்கப்பட்டுள்ளாரோ அந்த இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் என்பது பொருள்படும்.

தொடரிலக்கம் :

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 12(1)

**படிவம் 1**

எந்த ஆளிடம் சிறுவர் சரணடைகின்றாரோ அல்லது எந்த ஆளினால் சிறுவர் கைது செய்யப்படுகின்றாரோ அவ்வாளினால் அச்சிறுவர் ஒவ்வொருவர் தொடர்பிலும் பயன்படுத்தப்பட வேண்டிய படிவம்

(இணைப்பிரதியுடன் நிரப்பப்படுதல் வேண்டும்).

| | |
|---|---|
| 1. பெயர்: | |
| 2. வயது: | |
| 3. பால் நிலை : | |
| 4. முகவரி : | |
| 5. சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம் : | |
| 6. சரணடைந்தவரின் சூழ்நிலை : | |
| 7. பொலிசுக்கு கையளித்த திகதி, நேரம் மற்றும் இடம் : | |
| 8. சரணடைந்த சிறுவரை கையளிக்கின்ற அலுவலரின் பெயரும் கையொப்பமும்: | |
| 9. சரணடைந்த சிறுவரை ஏற்றுக்கொள்ளும் பொலிஸ் அலுவலரின் பெயரும் கையொப்பமும் : | |

**படிவம் 2**

(ஒழுங்கு விதி 12 (2)

சரணடையும் சிறுவர் ஒவ்வொருவர் தொடர்பிலும் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பலுவலரால் பயன்படுத்தப்பட வேண்டிய படிவம்

| | |
|---|---|
| 1. பெயர்: | |
| 2. வயது: | |
| 3. பால் நிலை : | |
| 4. முகவரி : | |
| 5. சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம் : | |
| 6. பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 7. நன்னடத்தைப் பாதுகாவலர் அலுவலருக்கு அறிவிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 8. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளருக்கு அறிவிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 9. தடுத்து வைக்கப்பட்டுள்ள வயது வந்தோரிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றதா என்பது : | |
| 10. ஒரு பெண்ணாயின் பெண் அலுவலர் ஒருவரின் கட்டுக்காவலில் வைக்கப்படுகின்றதா, அலுவலரின் பெயரைத் தரவும் : | |
| 11. அரசாங்க மருத்துவ அலுவலரிடம் முன்னிலைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 12. நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 13. சிறுவருடன் உடன் செல்லும் பொலிஸ் அலுவலரின் பெயர் : | |
| 14. மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 15. நீதிவானின் இடைக்கால கட்டளை: | |
| 16. புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் அனுப்பப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |

**படிவம் 3**

(ஒழுங்கு விதி 16(2), 18(1)(ஏ) மற்றும் 22(1)(ஏ)

ஒவ்வொரு சிறுவர் தொடர்பிலும் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரினால் பயன்படுத்தப்பட வேண்டிய படிவம்

| | |
|---|---|
| 1. பெயர்: | |
| 2. வயது: | |
| 3. பால் நிலை : | |
| 4. முகவரி : | |
| 5. பொலிசிலிருந்து அறிவிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் : | |
| 6. ஒப்படைக்கப்பட்ட நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரின் பெயர் : | |
| 7. இடைக்கால மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதா என்பது நீதிமன்றத்திற்கு எப்போது அறிக்கையிடப்பட்டது என்பதும். | |
| 8. நீதிவானால் செய்யப்பட்ட, ஆக்கப்பட்ட கட்டளையின் திகதி மற்றும் வைக்கப்பட்ட இடம் : | |
| 9. பூரண சமுதாய விசாரணை நடத்தப்பட்டதா என்பதும் நீதிமன்றத்திற்கு எப்போது அறிக்கையிடப்பட்டது என்பதும் : | |
| 10. நீதிவானால் ஆக்கப்பட்ட மீள் ஒருங்கிணைப்புக் கட்டளை திகதி மற்றும் வைக்கப்பட்ட இடம் : | |
| 11. வைத்திருத்தல் பற்றிய அறிக்கை நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரிடமிருந்து கிடைக்கப்பெற்றால் பொறுப்பலுவலர் தங்குமிடவசதி நிலையம் அல்லது புனர்வாழ்வு நிலையம் அத்துடன் நீதிவானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதா,? மாதம் 1 | |
| 12. மாதம் 2 | |
| 13. மாதம் 3 1 ஆம் காலாண்டு | |
| 14. மாதம் 4 | |
| 15. மாதம் 5 | |
| 16. மாதம் 6 2 ஆம் காலாண்டு | |
| 17. மாதம் 7 | |
| 18. மாதம் 8 | |
| 19. மாதம் 9 3 ஆம் காலாண்டு | |
| 20. மாதம் 10 | |
| 21. மாதம் 11 | |
| 22. மாதம் 12 4ஆம் காலாண்டு | |

**படிவம் 4**

(ஒழுங்குவிதி 23(2)

பாதுகாப்பளிக்கும் சிறுவர் தங்குமிட நிலையத்தில் பொறுப்பலுவலரால் நிரப்பப்பட வேண்டிய படிவம்

| | | |
|---|---|---|
| 1. பெயர்: | | |
| 2. வயது : | | |
| 3. முகவரி : | | |
| 4. சுகாதார கவனிப்பு (கைது செய்யப்பட்டு வழங்கப்பட்டதா): | | |
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |

**படிவம் 4** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |
| (9) | | |
| (10) | | |
| (11) | | |
| (12) | | |
| | | |
| 5. உளவியல் ஆலோசனை (மாதாந்த அறிக்கைகள்) | | |
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |
| (9) | | |
| (10) | | |
| (11) | | |
| (12) | | |
| | | |
| 6. குடும்ப உறுப்பினர்களின் வருகை (வந்த திகதிகள் மற்றும் குறிப்புகள்): | | |
| 7. அடையாளங் காணுதல் மற்றும் வேறு ஆவணங்கள் வழங்கப்பட்டனவா?: | | |
| 8. கல்வி (மாதாந்த அறிக்கை): | | |
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |
| (6) | | |
| (7) | | |
| (8) | | |
| (9) | | |
| (10) | | |
| (11) | | |
| (12) | | |
| | | |
| 9. வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சி (மாதாந்த அறிக்கை) : | | |
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |

**படிவம் 4** *(தொடர்ச்சி)*

| | | |
|---|---|---|
| *(6)* | | |
| *(7)* | | |
| *(8)* | | |
| *(9)* | | |
| *(10)* | | |
| *(11)* | | |
| *(12)* | | |
| | | |
| *10.* வேறு பயிற்சி (மாதாந்த அறிக்கை): | | |
| *(1)* | | |
| *(2)* | | |
| *(3)* | | |
| *(4)* | | |
| *(5)* | | |
| *(6)* | | |
| *(7)* | | |
| *(8)* | | |
| *(9)* | | |
| *(10)* | | |
| *(11)* | | |
| *(12)* | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

3 - G 14605